2010 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

92—

நீதிமன்ற வளாகம்

***32727—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூர் நகரிலுள்ள நீதிமன்றங்களை ஒருங்கிணைத்து ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேட்டூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்காக, 13-4-2007 அன்றே இந்த மாமன்றத்தில் அறிவித்தோம். அங்கு கட்டுவதற்கு ஏற்ற இடம் கிடைக்காததால் தள்ளிப்போய்க் கொண்டேயிருக்கிறது. விரைவில் அதற்கான ஒரு முடிவு வருமென்று கருதுகிறேன். இப்போது ஒரு குறிப்பிட்ட இடத்தை நீதிமன்றம் கட்டுவதற்கு ஒதுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இடமாற்றம் செய்யப்பட வேண்டும். அது நடந்தால் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு அரசு உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மேட்டூரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம்-1, குற்றவியல் நீதிமன்றம்-2 ஆகிய நான்கு நீதிமன்றங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலும், குறிப்பாக, குற்றவியல் நீதிமன்றம்-1 மற்றும் 2 ஆகியவை மேட்டூர் வட்டத்திற்கும், ஓமலூர் வட்டத்திற்கும் சேர்ந்திருக்கக்கூடிய

நீதிமன்றங்கள். ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் வேண்டுமென்று 2007-இல் நான் சட்டமன்றத்திலே கேட்ட நேரத்திலேதான், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவித்தார்கள். தற்போது இடப் பிரச்சினை ஏற்பட்டு, அந்த இடத்திற்கும் தமிழக அரசு ஒப்புதல் கொடுத்துவிட்டது. உயர் நீதிமன்றமும் 2008-இல், அதாவது, 2008 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம், 6 ஆம் தேதி உயர் நீதிமன்றமும் ஆணை வழங்கியிருக்கிறது. இடையிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால், நிலத்தை ஒருங்கிணைத்து வழங்கவேண்டியது அவசியமாகிறது. அங்கே மின் வாரியத்திற்குச் சொந்தமான இடம், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம், அதேபோல வனத் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நீதிமன்றம் வளாகம் கட்டுவதற்கு அரசின் சார்பிலே நிலத்தைக் கொடுப்பதற்கு விரைவாக அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் ஒரு இடத்தைக் காட்டி, உயர் நீதிமன்றத்திற்கு அந்த இடத்தைத் தரலாம் என்று சொன்னார்கள். பிறகு அவர்களே அது வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். இப்போது கேட்டிருக்கிற அந்த இடத்தில் ஏற்கெனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், மின் வாரியம், வனத் துறை, நகராட்சிப் பணியாளர்கள் குடியிருப்பு, பொதுமக்கள் பயன்படுத்துகிற தார்ச் சாலை, இவையெல்லாம் இருக்கின்றன. எனவே, அந்த இடத்திலே இவ்வளவையும் காலி செய்து விட்டு அதில் நீதிமன்றம் கட்டுவது ஏற்றதாக இருக்காது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது பதிலைத் தெரிவித்தார்கள். ஆனாலும், உயர் நீதிமன்றம் அதே இடம் வேண்டுமென்றுதான் மறுபடியும் கேட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்தினுடைய கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டுமென்றுதான் அந்த இடத்தை ஒதுக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுங்கள் என்று 10-3-2010 அன்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

2010 ஏப்ரல் 26]

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருக்கிற அந்த இடம் 2.19 ஏக்கர். சர்வே எண் 2 முதல் 13/1, பிளாக் எண் 7, இது 4 துறைகளுக்குச் சொந்தமான இடம். பொதுப் பணித் துறை, நகராட்சி நிருவாகம், மின்சார வாரியம், வனத் துறை ஆகியவற்றுக்குச் சொந்தமானது. இதிலே பொதுப் பணித் துறையும், நகராட்சியும் எங்கள் இடத்தைக் கொடுக்கிறோம் என்று ஒப்புதல் கடிதம் கொடுத்துவிட்டார்கள். அடுத்து, அங்கே இருக்கிற வனத் துறை இடம் என்பது, வனமாக இல்லை. வனத் துறை அலுவலர் ஒருவருடைய குடியிருப்பு, வனச் சரக அலுவலருடைய குடியிருப்பு அது. அது ஓட்டுக் கட்டடம், பழைய கட்டடம். அதேபோல மின்சார வாரிய இடத்தில் பணியாளர்களுடைய குடியிருப்பு இருக்கிறது. அந்தக் குடியிருப்புகளை எப்போது கட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால், மேட்டூர் அணை கட்டுகிற நேரத்தில், அதாவது 1937-இல் கட்டப்பட்ட ஓட்டுக் கட்டடம். அப்போது கட்டப்பட்ட கட்டடங்களைத்தான் எல்லாத் துறைகளுக்கும் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கட்டடம் எல்லாமுங்கூட இப்போது பழுதடைந்திருக்கின்றன. அங்கு நிரந்தரமாக வேறு கட்டடமும் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால்தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, சுருக்கமாகக் கேளுங்கள். சுருக்கமாகக் கேட்டால்தான், துணைக் கேள்வி கேட்க அனுமதி கொடுக்க முடியும்.

திரு. ஜி.கே. மணி: சுருக்கமாகக் கேட்கிறேன். ஆகவே, அந்த இடத்தில் நகராட்சியும், பொதுப் பணித் துறையும் அனுமதி வழங்கிவிட்ட நிலையில், வனத் துறைக்கும், மின்சார வாரியத்திற்கும் அனுமதி கேட்டு கடிதம் எழுதி உடனடியாகப் பெற்றுவிடலாம். முக்கியமாகக் கருதக்கூடிய இடமாக அவை இல்லை. எனவே, அந்த இரண்டு இடங்களையும் பெற்று விரைவில் நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு துறைக்குச் சொந்தமான இடத்தை இன்னொரு துறைக்கு மாற்றுவதிலே எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களுக்குத் தெரியும் என்று

[2010 ஏப்ரல் 26

கருதுகிறேன். காரணம், அந்தத் துறை முதலிலே இசைவு தர வேண்டும். Land Reforms Commissioner-லிருந்து, இங்கு CLA அவர்கள் வரை அனுமதி கொடுக்க வேண்டும். பிறகு, துறைக்குப் போக வேண்டும், இதற்குப் பல ஆண்டுகள் ஆகும். அதனால்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார், 'வட்ட எண் 11, நகர எல்லை எண் 8-இல் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 1,322.5 சதுர மீட்டர் நிலம் நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு ஏற்ற இடம்; இது நகரின் மையப் பகுதியில் இருக்கிறது; பழைய நீதிமன்றத்திற்குப் பக்கத்தில் இருக்கிறது' என்று. ஆகவே, அந்த இடத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறோம். ஏனென்றால், ஒரேயொரு துறை, பொதுப் பணித் துறை மட்டும்தான் அனுமதி கொடுக்க வேண்டும். இதிலே, 5, 6 departments இருக்கின்றன; ஆகையால் அதை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னோம். முடியாது என்று கோர்ட்டுக்குப் போகிறார்கள். கோர்ட் என்ன சொல்கிறது? அதே இடத்தைக் கொடுங்கள் என்று சொல்கிறது. (குறுக்கீடு) கொடுக்கக் கூடாது. நீதிமன்றம்கூட, யாராவது போய் நீதிமன்றத்திலே எங்களுக்கு இடம் ஒதுக்குங்கள் என்று கேட்டால், அரசாங்கம் அதைக் கவனிக்க வேண்டும்; அதாவது consult பண்ணுங்கள் என்று சொல்ல வேண்டுமே தவிர, இந்த இடத்தைக் கொடுங்கள் என்று சொல்லக் கூடாது. கோர்ட்டிற்கு அந்த directions கொடுப்பதற்கு power இல்லை. இருந்தாலும் கொடுத்தார்கள். நாங்கள் நீதிமன்றத்தை மதிக்கின்ற காரணத்தால், அவர்கள் எந்த இடத்தைச் சொல்கிறார்களோ, அதே இடத்தில் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். இந்த formality நடப்பதற்கு, it will take time. இந்த formality இல்லாத இடத்தைக் காண்பித்தால் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். 5, 6 இடங்கள் என்பதால் கொஞ்சம் காலதாமதம் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களை ஒருங்கிணைந்த வளாகத்தில் அமைக்க வேண்டுமென்ற கேள்விகளை ஏராளமான பேர் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதனுடைய வாய்ப்புகள் குறித்து அமைச்சர் அவர்களும் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நீதிமன்றத்தின்மூலமாக உத்தரவைப் பெற்றுத்தான் அதைச் செய்ய முடியும் என்று சொல்கிறபோது, எந்த முன்னுரிமை அடிப்படையில்

2010 ஏப்ரல் 26]

அந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகின்றது? அதை ஆண்டுதோறும் நமது அமைச்சகத்தின்மூலமாகத் தயாரித்துக் கொடுக்கிறோமா? அந்த மாதிரியான பட்டியல்களை வெளியிட முடியுமா என்பதை அறிய விரும்புவதோடு, என்னுடைய தொகுதியிலும் அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது. ஏராளமான நீதிமன்றங்கள் தனித் தனிக் கட்டடங்களிலே, வாடகைக் கட்டடங்களிலே செயல்படுகின்றன. அங்கேயும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்வதற்கு, நகராட்சியிலும், வெளியிலும் நிலங்கள் இருக்கின்றன. அந்த வாய்ப்புகள் இருக்குமானால் அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நீதிமன்றங்களைத் தொடங்குவது என்பது ஒன்று. ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவது என்பது இரண்டாவது. புதிய நீதிமன்றங்களை ஆரம்பிப்பதற்கு முழுக்க முழுக்க உயர் நீதிமன்றம்தான் பொறுப்பு. காரணம், அங்கே தேங்கியிருக்கிற வழக்கு, அதனுடைய தன்மைகளை ஆராய்ந்து இந்த இடத்திலே Sub Court, Magistrate Court ஆரம்பிக்கலாம் என்று சொல்வார்கள். ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு, எப்படி உயர் நீதிமன்றம் எங்களை அறிவுறுத்துகிறது என்றால், எந்த ஊரில் மிகப் பழைமையான கட்டடம் இருக்கின்றதோ, அதற்கு முன்னுரிமை தருவார்கள். இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, ஒரே இடத்திலே இல்லாமல், இந்தத் தெருவில் ஒரு கோர்ட், இன்னொரு தெருவில் ஒரு கோர்ட், கீழண்டை தெருவில் ஒரு கோர்ட் என்று scattered-ஆக இருந்தால் அங்கே நீதிமன்றங்களை ஒருங்கிணைக்கலாம் என்று அவர்கள் தெரிவிப்பார்கள். சில இடங்களில் அதிகமான வாடகையைக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. சில வீட்டுக்காரர்களும், இடத்தைக் காலி செய்யவேண்டுமென்று தொல்லை கொடுப்பார்கள். அந்த மாதிரி நிலை இருக்கின்ற இடங்களுக்கு முன்னுரிமை தரப்படுகின்றது. ஆக, மிகப் பழைமையான கட்டடமாக இருந்தால், scattered-ஆக இருந்தால், வாடகை அதிகமாக கொடுக்கக்கூடிய இடமாக இருந்தால், அது இடிந்து விழக்கூடிய நிலையிலே இருந்தால், அவற்றையெல்லாம் கணக்கெடுத்து, அந்தந்த ஊர்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தைக் கட்டுவதற்கு அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்கிறார்கள்.